**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 152/2019 |
| Name | : Marimuthu |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.05.2025

**எதிரிகள் 1 மற்றும் 2 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது கடத்தூரில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். நான் எனது அம்மா, அப்பா மற்றும் தங்கையுடன் வசித்து வந்தேன் திருமணம் செய்து சென்ற தங்கை 12.10.2018ம் தேதி எங்கள் தோட்டத்திற்கு வந்தார்கள். எதிரிகள் ரூ.63,000/-த்திற்கு ஏற்கனவே விலை பேசி வைத்திருந்த மாட்டை விற்க முடியாமல் எனக்கு அவசரத்திற்கு ரூ.50,000/- விற்று விட்டேன் ரூ.7000/- அதிகம் கேட்டார் நான் கொடுத்துவிட்டேன் மறுபடியும் 13.10.2018ம் தேதி மதியம் 12.00 மணிக்கு எங்கள் தோட்டத்திற்கு வந்து பணம் ரூ.4000/- கேட்டார் நான் கொடுக்க மாட்டேன் என்று சொன்னேன் உடனே என்னை தேவடியா மகனே நீ பணம் கொடுக்க மாட்டியா மாட்டை வாங்கிவிட்டு என்று திட்டினார் அவரின் மனைவி உடனே ஊம்புறக்கா மாடு வாங்கினா மாட்டை வாங்கிட்டு பணம் கொடுக்க மாட்டியா என்று திட்டினார் 2ம் எதிரி குழந்தையுடன் நின்று கொண்டிருந்த என் தங்கையை தள்ளிவிட்டார் நீ எல்லாம் இதில் வக்காலத்திற்கு வரக்கூடாது எனக்கு பணம் தேவை என்று திட்டினார். மாட்டிற்கு

தீவனம் வைக்கும் தொட்டி மேல் இருந்த கட்டையை எடுத்து எனது தலையில் ஆலடியான் அடித்தார் நான் கீழே விழுந்துவிட்டேன். எதிரிகள் அவர்களுடைய காரில் கிளம்பிச் சென்றுவிட்டார்கள். என் அப்பா ஆம்புலன்ஸ் வரவழைத்து உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். அங்கிருந்து கோவை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். நான் அவசர சிகிச்சை பிரிவில் 9 நாட்கள் சிகிச்சை பெற்று மொத்தம் 2 மாதங்கள் சிகிச்சை பெற்றேன். நான் கோவை மருத்துவமனையில் இருந்த போது 13.10.2018 ம் தேதி போலீசார் வந்து விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார். 14.10.2018 ம் தேதி உதவி ஆய்வாளர் வந்து விசாரித்தார். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் கட்டையால் தான் எதிரி என்னை அடித்தார். **அந்த கட்டை அரசுத் தரப்புச் சான்று பொருள் 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்